# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம், 2021

# Special Summary Revision of Photo Electoral Rolls, 2021

## அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கூட்டம்

## Meeting with the representatives of recognized Political Parties

**03–11–2020**


- Thiru. Satyabrata Sahoo, I.A.S.,
- Chief Electoral Officer, Tamil Nadu

# SSR 2021 – Electoral Statistics

| | |
|---|---|
| Final publication of previous Summary Revision on 14/02/2020 | Total **6.13** Crores of Electors<br>Male - 3.03 Crores<br>Female - 3.10 Crores<br>Third Gender - 6497 |
| Continuous Updating period 14.02.2020 to 01.11.2020 | Inclusions – 2.08 Lakhs<br>Deletions - 4.70 Lakhs |
| Electorate as on 01/11/2020 | Total **6.10** Crores of Electors<br>Male - 3.01 Crores<br>Female - 3.09 Crores<br>Third Gender - 6385 |

# வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்

The ECI has announced Special Summary Revision of Photo Electoral Rolls with reference to 01-01-2021 as the Qualifying date

இந்திய தேர்தல் ஆணையம் 01-01-2021-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை அறிவித்துள்ளது

Indian citizens who are above 18 years of age, and those born between 02.01.2002 and 01.01.2003 are also qualified for enrolment during this revision.

18 வயதிற்கு மேற்பட்ட இந்திய குடிமக்களும், 02.01.2002 முதல் 01.01.2003 வரையிலான காலத்தில் பிறந்த இந்திய குடிமக்களும், இத்திருத்த காலத்தில் வாக்காளராக பதிவு செய்து கொள்ள தகுதியுடையோர் ஆவர்

Draft rolls will be published on 16-11-2020 (Monday) at all the designated locations (ERO/AERO offices and School buildings)

வரைவு வாக்காளர் பட்டியல் அனைத்து நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலும் (வாக்காளர் பதிவு அலுவலர்/ உதவி வாக்காளர் பதிவு அலுவலர்அலுவலகங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள்) 16-11-2020 திங்கட்கிழமை அன்று வெளியிடப்படும்.

# வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்

The Electoral Roll is published by the Electoral Registration Officer (ERO) in the following places

- ✓ His office situated in the Assembly Constituency
- ✓ If his office is located outside the AC, then at a place designated by him

வாக்காளர் பதிவு அலுவலர் வரைவு வாக்காளர் பட்டியலை கீழ்காணும் இடங்களில் வெளியிடுவார்.

- ✓ தொகுதியினுள் அவரது அலுவலகத்தில்
- ✓ அவரது அலுவலகம் தொகுதி எல்லைக்கு வெளியில் அமைந்திருப்பின் அவரால் குறிப்பிடப்பட்ட இடத்தில்

On the day of publication of the roll, a soft copy will be hosted in the CEO's website in PDF format

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாளன்று தலைமை தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் பொதுமக்களின் பார்வைக்காக நகல் ( PDF COPY) வெளியிடப்படும்.

In addition to the above, copies of the draft roll will be kept at all polling stations to enable the Public to submit claims and objections in an easy manner

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் பொதுமக்கள் எளிதாக பார்வையிட்டு அவர்தம் கோரிக்கை மறுப்புரைகளை சமர்ப்பிக்கும் வண்ணம் எல்லா வாக்குச்சாவடிகளிலும் வெளியிடப்படும்.

# வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்

As stipulated in Rule 11 (C) of Registration of Electors Rules, 1960, two copies i.e. one soft PDF copy and one hard print copy of the draft roll are given, free of cost, to all recognized political parties. The Soft PDF copy of electoral roll shall not have the Photographs.

வாக்காளர் பதிவு விதிகள், 1960 விதி எண்.11 (சி)இன் கீழ் அறிவுறுத்தியுள்ளவாறு, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கும், வரைவு வாக்காளர் பட்டியலின் இரு நகல்கள் அதாவது ஒரு அச்சிட்ட நகலும், ஒரு மென் நகலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மென் நகலில் வாக்காளர் புகைப்படம் இடம்பெறாது

Soft copies of the Electoral Roll (without photographs) can be obtained from the ERO by making the prescribed payment. (The prescribed fee for soft copy of the roll of an Assembly Constituency in CD is Rs 100/-)

வாக்காளர் பட்டியலின் மென் நகலினை (புகைப்படமின்றி) கட்டணம் செலுத்தி பெறலாம். (சட்டமன்ற தொகுதியின் பட்டியல் ஒரு குறுந்தகடுக்கு தலா ரூ.100/)

# செயல் அட்டவணை - Schedule

| | |
|---|---|
| Publication of Integrated Draft Electoral Roll<br>ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள்: | 16-11-2020 |
| Period for filing claims and Objections<br>கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் விண்ணப்பிக்கும் காலம் | 16-11-2020 முதல்<br>15-12-2020 வரை |
| Special Campaign Dates<br>சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் | 21-11-2020(Saturday),<br>22-11-2020(Sunday) and<br>12-12-2020(Saturday),<br>13-12-2020(Sunday) |
| Final Publication of Electoral Roll<br>இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் : | 20-01-2021<br>(Wednesday) |
| National Voters Day<br>தேசிய வாக்காளர் தினம் | 25-1-2021 |

## Rationalization of Polling Stations
## வாக்குச்சாவடிகள் சீரமைப்பு

As per the directions of the Election Commission of India, rationalization of polling stations has been done in consultation with the political parties

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணைகளுக்கிணங்க அரசியல் கட்சியினரைக் கலந்தாலோசித்து வாக்குச் சாவடிகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது

As of now 67,687 polling stations are there in Tamil Nadu. Political parties are requested to appoint BLAs for the polling stations for which BLAs have not been appointed so far.

தற்போது தமிழ்நாட்டில் 67,687 வாக்குச் சாவடிகள் உள்ளன. இதுவரை வாக்குச்சாவடி நிலை முகவர்கள் நியமிக்கப்படாத வாக்குச் சாவடிகளுக்கு, வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிக்குமாறு அரசியல் கட்சியினர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

# Booth Level Agents - வாக்குச் சாவடி நிலை முகவர்கள்

As per the directions of ECI, Booth Level Agents (BLAs) are appointed to assist the Booth Level Officers (BLOs)

வாக்காளர் பட்டியல்களை நிர்வகிப்பதில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு உதவி செய்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படுகிறார்கள்.

Election Commission —Informs→ Political parties —Appoints→ Booth Level Agents

தேர்தல் ஆணையம் —தெரிவிக்கின்றது→ அரசியல் கட்சி —நியமிக்கின்றது→ வாக்குச்சாவடி நிலை முகவர்கள்

# Booth Level Agents - வாக்குச் சாவடி நிலை முகவர்கள்

- Duties of BLAs
  - To guide the public to file appropriate application forms for Inclusion / Deletion / Modification of entries
  - பெயர் சேர்க்க/நீக்க/திருத்தம் செய்ய உரிய விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்க பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்
  - To sensitize the citizens about the Special campaign days and to assist the BLOs
  - முகாம்கள் நடைபெறுவதை மக்களுக்கு நினைவூட்டி BLO க்களுக்கு உதவி செய்தல்
  - Analysing the Electoral roll of his/her part to identify dead / shifted electors and highlight the issues identified
  - வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்த மற்றும் இடம் பெயர்ந்த வாக்காளர்கள் பற்றி ஆய்வு நடத்தி தகவல் தெரிவித்தல்

# Booth Level Agents - வாக்குச் சாவடி நிலை முகவர்கள்

- Duties of BLAs – contd….
  - BLA can submit a maximum of 10 applications in a day. If a BLA files more than 30 applications/forms during the entire period of filing claims & objections, then the cross verification must be done by ERO/AERO themselves. Further the BLA will also submit the list of application forms with a declaration that he has personally verified the particulars of the application forms and is satisfied that they are correct.

  - திருத்த காலத்தில் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 10 படிவங்கள் வரை அளிக்கலாம். , திருத்த காலத்தில் ஒரு BLA மொத்தமாக 30 படிவங்களுக்கு மேல் சமர்ப்பித்தால், அவ்விண்ணப்பங்களை ERO/AERO சரிபார்க்கவேண்டும். மேலும் BLA தாம் சமர்ப்பிக்கும் படிவங்களின் பட்டியலையும் விவரங்களையும் சரிபார்த்து தாம் மனநிறைவு அடைந்ததாக ஒரு உறுதிமொழியையும் சமர்ப்பிக்கவேண்டும்

# வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLAs) நியமன முறை

- Every recognized Political party, through its President or Secretary or any other office bearer shall authorize one or more district representatives to appoint Booth Level Agents (BLAs) [Form ID: BLA 1]
- ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் அதன் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது வேறு ஏதேனும் பொறுப்பு வகிப்பவர் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று (அ) அதற்கு மேற்பட்ட பிரதிநிதியை வாக்குச் சாவடி நிலை முகவர்களை நியமிக்க அனுமதிக்கலாம், (படிவம் BLA 1)
- This authorized district representative of the Political party will appoint Booth Level Agent for each Polling station in Form ID BLA2
- இப்பிரதிநிதி ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் வாக்குச் சாவடி நிலை முகவர்களை நியமிக்கலாம். (படிவம் BLA2)
- The BLA must be a registered elector in the relevant part of the Electoral Roll so as to scrutinize the entries in the draft Electoral Rolls during revision period.
- வாக்குச் சாவடி நிலை முகவர் சம்பந்தப்பட்ட பகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான், வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின்போது பரிசீலிக்க ஏதுவாக இருக்கும்.

# வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLAs) நியமன முறை

- No Government Employee or staff of the local body authority can act as a BLA
  - அரசுப்பணி அல்லது உள்ளாட்சித் துறைகளில் பணிபுரிபவர் வாக்குச்சாவடி நிலை முகவராக பணியாற்ற முடியாது.
- The BLA will handover his/her appointment letter to Designated officer / BLO
  - வாக்குச்சாவடி நிலை முகவர் தனது நியமனக் கடிதத்தை நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

# கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியலை பார்வைக்கு வைத்தல் – Display of list of claims and objections

✓ As per rule 16 of the registration of Elector rules, 1960, ERO shall prepare lists of claims and objections in form 9,10,11 and 11A and exhibit one copy of such list on notice board in his office.

✓ வாக்காளர் பதிவு விதிகள், 1960, விதி 16யின் படி, வாக்காளர் பதிவு அலுவலர் வரப்பெற்ற கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியலை படிவம் 9,10,11 மற்றும் 11A யில் தயார் செய்து தனது அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கவேண்டும்.

✓ Besides list of all claims and objections shall be put up on the website of CEO so that citizens are able to see the list and lodge complaints with the concerned ERO.

✓ மேலும் மேற்கண்ட விவரங்களை பொதுமக்கள் அறிந்துகொண்டு தங்களது மறுப்புரைகள் ஏதுமிருப்பின், அவற்றை வாக்காளர் பதிவு அலுவலரிடம் அளிக்க ஏதுவாக தலைமைத் தேர்தல் அலுவலரின் வலைதளத்திலும் வெளியிடப்படும்.

## கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியலை பார்வைக்கு வைத்தல் – Display of list of claims and objections

- ✓ List of Claims and Objections shall be made available by ERO to all political parties on weekly basis. For this purpose, the ERO shall call a meeting of all political parties on regular interval and personally handover list of claims and objections to them and Obtain acknowledgement. The list shall be incremental instead of cumulative.

- ✓ கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் பட்டியலை அனைத்து அரசியல் கட்சியினருக்கும் ஒவ்வொரு வாரமும் வாக்காளர் பதிவு அலுவலர் வழங்கிட வேண்டும். இதற்கென வாக்காளர் பதிவு அலுவலர் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கூட்டம் நடத்தி அந்த வாரத்திற்குரிய பட்டியலை நேரடியாக வழங்கி ஒப்புதல் பெறவேண்டும்.

At the time of final publication of SSR, 2021, the final roll will be a single integrated one, in which all the addition entries will come with Sl.No. in continuation after the last entry of the mother roll and all the modifications and deletions during summary revision will be reflected in the mother roll itself, as per the Commission's existing instructions. No separate addition, deletion and modification list will be printed and given to the political parties.

சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2021-ன் இறுதி வாக்காளர் பட்டியல் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே பட்டியலாய் இருக்கும். அதில் தேர்தல் ஆணையத்தின் தற்போதைய அறிவுரைகளின்படி, சேர்த்தல் பதிவுகள், மூல வாக்காளர் பட்டியலின் இறுதிப் பதிவையடுத்த தொடர் எண்ணுடனும் திருத்தல்களும், நீக்கல்களும், மூல வாக்காளர் பட்டியலிலேயே காட்டப்பட்டும் இருக்கும். சேர்த்தல், நீக்கல், திருத்தல்களுக்கான தனித்தனியான பட்டியல்கள் அச்சிடப்பட்டு அரசியல் கட்சியினருக்கு அளிக்கப்படமாட்டாது.

Transparency Measures: In order to facilitate the stakeholders and bringing more transparency in the process of electoral registration, the practice of computerization and posting of all application forms received in Forms 6,6A,7,8 and 8A on the website of the CEO on a day to day basis, shall continue, in addition to putting draft electoral roll, final electoral roll, list of claims and objections on CEO's website and sharing of the same with recognized political parties. The CEO shall extract a report on status of disposal of claims and objections received during the revision from ERO-Net and put the same on his website on weekly basis, for information of general public/citizens.

வெளிப்படைத்தன்மைக்கான நடவடிக்கைகள்

தொடர்புடைய அனைவரின் வசதிக்காகவும், வாக்காளர் பதிவில் மேலும் வெளிப்படைத் தன்மையைக் கடைபிடிக்க ஏதுவாக , தலைமை தேர்தல் அலுவலரின் வலைதளத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் , இறுதி வாக்காளர் பட்டியல், கோரிக்கைகள் (ம) ஆட்சேபனைகளின் பட்டியல் ஆகியவற்றை வெளியிடுவது மற்றும் அவற்றின் நகல்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் வசம் வழங்குவதை உறுதி செய்வதுடன் திருத்தகாலத்தில் பெறப்பட்ட படிவங்கள் 6,6ஏ, 7, 8 மற்றும் 8ஏ அனைத்தையும் கணினியில் தரவேற்றி தலைமைத் தேர்தல் அலுவலரின் வலைதளத்தில் தினசரி அடிப்படையில் வெளியிடும் வழக்கம் தொடரும். படிவங்கள் தீர்வு செய்யப்படுவது குறித்த விவரங்களை ERONET மூலம் பெற்று பொதுமக்களின் தகவலுக்காக ஒவ்வொரு வாரமும் தம்முடைய வலைதளத்திலும் தலைமைத் தேர்தல் அலுவலர் வெளியிடுவார்.

# THANK YOU ALL

# அனைவருக்கும் நன்றி